*2019 பிப்ரவரி 14]*

*இரண்டு அல்லது மூன்று தொழிற்கூடங்களில் தொழில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 80 சதவிகிதம் தொழிற்கூடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு காலியாக உள்ள தொழிற்கூடங்களிலே உடனடியாக தொழில் தொடங்குவதற்கு, துறை அதிகாரிகள்மூலம் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்தின் அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அங்கு தொழிற்சாலைகள் அமைக்கப்படாத நிலையில், துறை சார்பாக அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அவர் சொல்லியிருக்கக்கூடிய அந்த* SIDCO Industrial Estate-ல் *குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அவர்கள் தொழிற்கூடத்தை அமைக்கவில்லை என்று சொன்னால், துறை ரீதியாக ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**80**—

## சிற்றுந்து வசதி

***36320—திரு. தா.மோ. அன்பரசன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆலந்தூர் தொகுதி, அய்யப்பன்தாங்கல்-பெரிய கொளுத்துவாஞ்சேரி-மதுரம் நகர் வழியாக மௌலிவாக்கம் செல்ல சிற்றுந்து இயக்க அரசு முன்வருமா?*

[2019 பிப்ரவரி 14

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்து துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது S22 என்ற வழித்தடத்தில் 3 சிற்றுந்துகள் அய்யப்பன்தாங்கல், இராஜரத்தினம் நகர் வழியாக இயக்கப் படுகின்றன. இராஜரத்தினம் நகர் பேருந்து நிறுத்தத்திலிருந்து சுமார் 600 மீட்டருக்குள்ளாகவும், அய்யப்பன்தாங்கல் பேருந்து நிறுத்தத்திலிருந்து சுமார் 800 மீட்டருக்குள்ளாகவும் பெரியகொளுத்துவாஞ்சேரி அமைந்துள்ளது. மேலும், அய்யப்பன்தாங்கல், பெரியகொளுத்துவாஞ்சேரி, மௌலிவாக்கம் பகுதிகளின் பிரதான சாலைகளில் போதுமான எண்ணிக்கையில் மாநகரப் பேருந்துகள் இயக்கப்படுவதால், இப்பகுதிகளில் சிற்றுந்து இயக்கிட தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட S22 என்ற வழித்தடத்தில் 3 சிற்றுந்துகள் அய்யப்பன்தாங்கல், இராஜரத்தினம் நகர், பெரியகொளுத்துவாஞ்சேரி, பரணிபுத்தூர் சாலை வழியாக மாங்காடு வழித்தடத்தில் இயக்கப்படுகின்றன. நாங்கள் கேட்பது அந்த வழித்தடத்தில் அல்ல. அய்யப்பன்தாங்கல், மௌலிவாக்கம் பகுதிகளில் உள்ள முருகன் நகர், தனலெஷ்மி நகர், மதுரம் நகர், அபிராமி நகர், ராஜ கணபதி நகர், சாய் நகர், பாலாஜி நகர், உத்திரா நகர், ஆதித்தனார் நகர், காமாட்சி நகர் உள்ளிட்ட பகுதிகளில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அப்பகுதிகளிலிருந்து அய்யப்பன்தாங்கல் பணிமனைக்கு வரவேண்டுமென்று சொன்னால், 3 கி.மீ. தொலைவு நடந்து வர வேண்டும் அல்லது ஷேர் ஆட்டோவில் வர வேண்டும். இதனால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, பொது மக்களினுடைய சிரமத்தினைக் கருத்தில்கொண்டு, அய்யப்பன்தாங்கல் பேருந்து நிலையத்திலிருந்து பெரியகொளுத்துவாஞ்சேரி, மதுரம் நகர் வழியாக மௌலிவாக்கம் வரை சிற்றுந்தை இயக்கிட வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

*2019 பிப்ரவரி 14*]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரத்தில் அந்த வழித்தடத்தில் 600 மீட்டர், 800 மீட்டர் பயண தூரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்த வழித்தடங்களை ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளில் இயக்கப்படுகின்ற பேருந்துகளில் பயணிகளின் அடர்வுகளையும் ஆய்வு செய்து, தேவை ஏற்படுமாயின் அந்தப் பகுதிகளில் சிற்றுந்து இயக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்):** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

**திரு. தா.மோ. அன்பரசன்:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், 2006-2011 ஆம் ஆண்டுகளில், எங்களுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞருடைய ஆட்சியில் 188*C*-குன்றத்தூர்-சைதாப்பேட்டை (வழி-கெருகம்பாக்கம்-கொளப்பாக்கம்-மணப்பாக்கம்),* 88K *குன்றத்தூர்-சென்னை உயர் நீதிமன்றம் (வழி-மதனந்தபுரம்-முகலிவாக்கம்-மணப்பாக்கம்), 54*B*-போரூர்-பிராட்வே (வழி-மதனந்தபுரம்-முகலிவாக்கம்-மணப்பாக்கம்), 52*G*-கவுல்பஜார்-கோயம்பேடு (வழி-பல்லாவரம்-கிண்டி),* M18N *நங்கநல்லூர்-கூடுவாஞ்சேரி (வழி-பழவந்தாங்கல்-மீனம்பாக்கம்-தாம்பரம்),* M*70*N *நங்கநல்லூர்-கோயம்பேடு (வழி-வானுவம்பேட்டை-கிண்டி),* M*21*G*-நங்கநல்லூர்-உயர் நீதிமன்றம் (வழி-தில்லைகங்கா நகர்-கிண்டி-சைதாப்பேட்டை),* M*152*N*-நங்கநல்லூர்-*Central Railway station) *(வழி வானுவம்பேட்டை-கிண்டி-சைதாப்பேட்டை), 139-கிண்டி-சோழிங்கநல்லூர் (வழி-ஆதம்பாக்கம் உள்வட்டச் சாலை), 16*M*-பட்டூர்-கோயம்பேடு (வழி-பரணிபுத்தூர்-மௌலிவாக்கம்-போரூர்),* 49B*-பூந்தமல்லி-தி.நகர் (வழி-பரணிபுத்தூர்-மௌலிவாக்கம்-போரூர்),* S11 (Mini Bus)*-ஆலந்தூர்-வேளச்சேரி (வழி-ஆதம்பாக்கம் உள்வட்டச் சாலை) என 12 வழித்தடங்களில் விடப்பட்ட பேருந்துகள், கடந்த காலங்களில் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இப்போது இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இதனால், பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்ற நிலை இருக்கின்றது. ஆக, கலைஞர் ஆட்சியில்*

விடப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. நேரு அவர்கள் சென்னை புறநகர் பகுதிகளில் 40 கிலோ மீட்டர் தூரம் என்றிருந்ததை, 50 கிலோ மீட்டராக நீட்டித்து, பல கிராமங்களுக்குப் புதிய பேருந்துகளை இயக்கினார். ஆனால், இன்றைக்கு எங்களுடைய தலைவர், அண்ணன் தளபதி அவர்கள் ஊராட்சி சபைக் கூட்டங்களை நடத்துகின்றபோது, பேருந்துகளை நிறுத்தியதால், அந்த கிராமங்களிலிருக்கும் மக்கள் எல்லோரும் 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் தூரம் நடந்து முக்கிய சாலைகளுக்கு வந்து, பேருந்துகளில் ஏறிச் செல்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது என்று கருத்து தெரிவிக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இயக்கப்பட்டு, இப்போது நிறுத்தப்பட்ட பேருந்துகளையெல்லாம், தயவுசெய்து மக்களுடைய நலன்களைக் கருதி மீண்டும் இயக்கிட வேண்டுமென்று இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது விடப்பட்ட பேருந்துகள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது விடப்பட்ட பேருந்துகள் என்று எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. வழித்தட சீரமைப்பு என்ற முறையில் வழித்தடங்களை மாற்றி பயணிகளின் அடர்வுக்கேற்ப பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஏனென்று சொன்னால், போக்குவரத்துக் கழகங்களுடைய நிதி நிலைமை அனைவரும் அறிந்ததே. அந்த வகையில், இப்போது இயக்கக்கூடிய பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் average, அதாவது, சராசரி பயணிகளின் அடர்வு என்பது வெறும் 50 சதவிகிதம்தான். அந்த வகையில் தேவைகள் அதிகமாக இருக்கின்ற வழித்தடங்களில் அதிகமான

*2019 பிப்ரவரி 14]*

*பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தேவைகள் அதிகம் இல்லாத வழித்தடங்களிலும்கூட, பேருந்துகள் இயக்கப்படும்; ஆனால், நடைகள் குறைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட 12 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகளும் முழுவதுமாக நிறுத்தப்படவில்லை. பொது மக்களுடைய தேவையும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்; போக்குவரத்துக் கழகங்களுடைய நஷ்டத்தையும் குறைக்க வேண்டுமென்கிற நோக்கத்தில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, வழித்தட சீரமைப்புகள் செய்யப்பட்டு, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. தகவல் கோரல்

### (அ) செம்மொழி தமிழாய்வு நிறுவனம், தொடர்ந்து திறம்பட இயங்க நடவடிக்கை எடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 12-10-2004 அன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், அன்னைத் தமிழ் மொழிக்கு, நம்முடைய தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு, செம்மொழி என்கிற கிரீடம் சூட்டப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய கோரிக்கையினையேற்று, 19-5-2008 அன்று செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் துவங்கப்பட்டது. அப்போது, தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த தலைவர் கலைஞர் அவர்கள், அந்த நிறுவனத்திற்குத் தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து 1 கோடி ரூபாயை வழங்கினார்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி)